பொது நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

13 சுடர்வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 24 புதன்கிழமை (08 07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர் : 190

# தேர்தலை ஒத்திவைப்பதற்காக நாடு முழுவதும் அவசரகாலம்?

## அரசு திட்டமிடுவதாக தகவல்

கொழும்பு, ஜூலை 8

**தென்பகுதி மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு வசதியாக அவசர காலச் சட்டத்தை நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தென்பகுதியில் ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்து வரும் மாதங்களில் நடத்தப்பட வேண்டியிருப்பது தெரிந்ததே.

ஆனால் அத்தேர்தல்களை இப்போது நடத்துவதற்கு அரசு விரும்பவில்லை எனக் கூறப்படுகின்றது.

வடக்கு–கிழக்கு யுத்தத்தில் பாதுகாப்புப் படையினரையும், பொலீஸாரையும் தீவிரமாக ஈடுபடுத்த வேண்டியுள்ளதால், தேர்தல் பணிக்கு போதிய பொலீஸாரை அனுப்ப முடியாது என்றும்—

இதன் காரணமாக] தேர்தலை தற்போது நடத்த முடியாதிருப்பதாகவும்—

எனவே தேர்தலை ஒத்திவைப்பதற்குபிரதான எதிர்க்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படையினர் 13 பேர் புளுக்குனாவத் தாக்குதலில் மரணம்!

கொழும்பு, ஜூலை 8

அம்பாறை மாவட்டம், மகா ஓயா வீதி புளுக்குனாவ பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட விசேட அதிரடிப் படையினர் 13 பேர் கொல்லப்பட்டனர்; 16 பேர் காயமடைந்தனர்.

வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கி இருந்து இத்தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

நாற்பத்தியைந்து நிமிடங்கள் நீடித்த இச்சண்டையில் இருபது விடுதலைப் புலிகள் வரை உயிரிழந்ததாகக் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

(உ-21-6)

## கொழும்பில் குண்டுச்சத்தம்

கொழும்பு, ஜூலை 8

கொழும்பில் நேற்றுமாலை 6.30 மணியளவில் கேட்ட பெரும் குண்டுச் சத்தங்களால் நகரில் பதற்றம் நிலவியது.

மக்கள் என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ என்று தெரியாது பதற்றத்துடன் வீடுகளுக்கு திரும்பினர்.

இது தொடர்பாக பின்னர் விசாரித்ததில், கோட்டைப் பகுதியில் உள்ள படைநிலை ஒன்றில் படையினர் பயிற்சியில் ஈடுபட்டமையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### இன்று முதல்

## திருமலை மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பு

### தாக்குதலைக் கண்டித்து

திருகோணமலை, ஜூலை 8

திருகோணமலை மாவட்ட பாடசாலை மாணவர்கள் இன்றுமுதல் தொடர்ச்சியாக பாடசாலை பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாக திருமலை மாணவர் ஒன்றியம் நேற்று அறிவித்துள்ளது.

திருமலையில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தார்மீக ஆதரவு வழங்கி நேற்றுமுன்தினம் திருகோணமலைப் பாடசாலை மாணவர்கள் போராட்டம் நடத்திய போது, சில மாணவ, மாணவிகள் தாக்கப்பட்டதாகவும்–

அந்தத் தாக்குதலைக்கண்டித்தே வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் தாங்கள் ஈடுபடவிருப்பதாகவும்—

மாணவர் ஒன்றியம் நேற்றுத் தெரிவித்தது.

பாடசாலை மாணவி ஒருவர் காலில் காயமடைந்ததாகவும்—

இத்தாக்குதலுக்காக மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும்—மாணவர்கள் தரப்பிற் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

### மெண்டிஸின் இடத்துக்கு

## புதிய ஐ. தே. க. கொறடா இன்று தெரிவாவார்

கொழும்பு, ஜூலை 8

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தனது புதிய நாடாளுமன்றக் கொறடாவைத் தெரிவு செய்வதற்காக இன்று கூடுகின்றது.

நாடாளுமன்ற கொறடாவாக இருந்த விஜேயபால மெண்டிஸ் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே புதியவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

(உ-3-6)

## முருங்கனில் டிரான்ஸ்போமர் தகர்ப்பு

வவுனியா, ஜூலை 8

மன்னார்– மதவாச்சி வீதி, முருங்கனில் நேற்று அதிகாலை மின்டிரான்ஸ்போமர் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கான லக்ஸபான மின் விநியோகத்தைத் தடுப்பதே இத்தாக்குதலின் நோக்கம் என பாதுகாப்புத் தரப்பு கூறுகின்றது.

நேற்று முன்தினம் இவ் வீதியில் 3 மின் கோபுரங்களும் தகர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-3)

### 23 ஆம் திகதி கொழும்பில்

## ஜனாதிபதியைச் சந்தித்து இந்துக் குருமார் பேசுவர்

கொழும்பு, ஜூலை 8

இந்துமதக் குருமாருக்கு பாதுகாப்புப் படையினரால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக இந்துமத குருமார்களுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 11.30 மணிக்கு அலரி மாளிகையில் பேச்சுக்கள் இடம்பெறவிருக்கின்றன.

[illegible] வலை ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர் சரத் கோணாகல இலங்கைபிராம்மண சமாஜத் தலைவரும், சபரிமலை [illegible] சாஸ்தா பீடாதிபதியுமான [illegible] கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாசாரியாருக்கு அனுப்பியுள்ளார்.

சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நல்லூர் சாமிவிஸ்வநாதக் குருக்கள், நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள், சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், வெள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கொலரா பீதியை அடுத்து

## வட்டக்கண்டலில் இடைத்தங்கல் முகாம்

வவுனியா, ஜூலை 8

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்திலிருந்து உயிலங்குளம் தடை முகாம் ஊடாக இராணுவக் கட்டுபாடற்ற பிரதேசங்களுக்கு செல்பவர்கள் கொலரா நோயால் பீடிக்கப்பட்டுள்ளனரா என்பதைக் கண்டறிவதற்காக—

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் வட்டக்கண்டலில் தற்காலிக இடைத்தங்கள்முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து வருபவர்கள் அந்த முகாமில் இருநாள்கள் தங்கவைக்கப்பட்டு தடுப்பூசி [illegible] வழங்கப்பட்டு பின்னர் வீடுசெல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அதேநேரம் —

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலிருந்து அவசர, அத்தியாவசியப்பணிகளுக்குச் செல்வோர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பஸ் நிலையத்தில் நயினை பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவில் பங்கு பற்றச் செல்லும் பக்தர் கூட்டம் நேற்று யாழ். பஸ் நிலையத்தில் அலைமோதியது.

இன்று நடைபெறும்தேர்த் திருவிழாவில் பங்குபற்றுவதற்காக நேற்றுக் காலை பக்தர்கள் யாழ். பஸ்நிலையத்தில் கூடினர்.

நேற்றுமாலை 7 மணிவரை 35 சேவைகள் நடத்தப்பட்டதாக பஸ்நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலோப்பளையில் கிளைமோர்கண்ணி

தென்மராட்சி, ஜூலை 8

நேற்று முன்தினம் காலை 6. 30 மணியளவில் பளை, புலோப்பளைப் பகுதி வீதி அருகில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. குண்டு வெடித்த இடத்தில் பாரிய குழி ஏற்பட்டு அருகில் இருந்த மரங்கள், வேலிகள் சேதமடைந்தன.

பாதைத் துப்பரவுப் பணியில் படையினர் ஈடுபட்டிருந்த சமயம் புலிகள் கிளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை 09-07-98
நாளை வழமைபோல் நடைபெறும்.
Poya Day Exam பிற்போடப்பட்டுள்ளது.
புதிய திகதி பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

BOND யாழ் நகர்.
(57437)

---

## மேசை வரிப்பந்தாட்டம்
(திறந்த)
## சுற்றுப் போட்டி
## Open Table Tennis Tournament

வருடாந்தம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவையால் யாழ். மாவட்ட றோட்டறிக்கழகத்தின் ஆதரவில் நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைவரிப்பந்தாட்டம் (திறந்த) சுற்றுப் போட்டிகள் இவ்வருடம் ஜூலை மாதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் உடற்கல்வித்துறையில் 20-07-1998 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விவரங்களையும் உடற்கல்வித் துறையில் பெற்றுக்கொள்ள முடியும்.

அனுமதிக் கட்டணம்:
ஒற்றையர் ஆட்டம் 40 ரூபா.
இரட்டையர் ஆட்டம் 60 ரூபா,

உடற்கல்வித்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.
(57436)

---

## கண்ணீர் அஞ்சலி

மக்ஷல் கவுஸ் உரிமையாளரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க உப செயலாளரும் ஆகிய
கணேசன்
அவர்களின் தாயார்
### திருமதி திரவியரத்தினம் சின்னையாபிள்ளை
[illegible] மறைவையிட்டு [illegible] தெரிவிக்கின்றோம்.

[illegible] வர்த்தகர், ஊழியர், நண்பர்கள்,
யூபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

---

## நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
இன்று மட்டும்
விஜயகாந்த் - ரேவதி
முரளி நடித்த
**என் ஆசை மச்சான்**
CD வெளியீடு
காட்சிகள்:- 10-30, 2-30
(57430)

---

## ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
**பாட்ஷா**
அடுத்த வெளியீடு!
10 ஆம் திகதி முதல்
**சத்ரிய வம்சம்**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4203)

---

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
புதன், வியாழன்
விஜயகாந்த் - ராதிகா
நடித்த
**கரிமேடு கரிவாயன்**
வெள்ளி, சனி
நாசர் - மாதவி நடித்த
**தாய் உள்ளம்**
ஞாயிறு, திங்கள்
விஜய் நடித்த
**செல்வா**
செவ்வாய், புதன்
சிவாஜி நடித்த
[illegible]
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57309)

---

## சிவா
திரையில்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
சரத்குமார் - சிம்ரான்
நடித்த
**நட்புக்காக**
(புதிய வெளியீடு)
தினசரி:- 10-30, 2-30
(57438)

---

## பாதுகாவலர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க பொதுக் கூட்டம் நாளை 9 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
(இ-5)

---

## விக்னா கல்வி நிறுவனம்
2ஆம் தவணைக்கான முன்னோடிப் பரீட்சை
பரீட்சை 5
ஆண்டு 6—11வரை பரீட்சை நடைபெறும்.

9 - 7 - 98 வியாழன்: காலை 9 மணி
பாடம்: கணிதம், விஞ்ஞானம், தமிழ்
12 - 7 - 98 ஞாயிறு: காலை 9 மணி
பாடம்: ஆங்கிலம், சமயம், சமூகக்கல்வி
மு. குறிப்பு:- 13 - 07 - 98 வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
(57431)

---

## 31 ஆம் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



தோற்றம்: 23 — 06 — 1926
மறைவு: 08 — 06 — 1998

திருமதி
### தங்கரத்தினம் கந்தையா

பண்போடு பாசமும்
பல்கலையும் தந்தவ
உற்றாரும் சுற்றாரும்
போற்றிடவே வாழ்ந்தவள்
மாரியில்லை என்றாலும்
பார்த்திடுவ பரிவுடன்
நிலையில்லாத உலகினில்
அவ நினைவுகள் மட்டும்
பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம் இல்லத்தில் ஒளிர்விட்ட புனிதமே!
நோயின் பிணியில் சிக்கி
காலன் கண்ணில்பட்டு எமையெல்லாம்
விட்டுச் சென்றதேனோ?

இறைவனடி சேர்ந்த அம்மையாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளையில் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பல்வேறு வகையில் உதவிகள் செய்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (8 - 7 - 98) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கைதடி கிழக்கு. கைதடி.
(சி/4216)

---

## நீங்காத நினைவுகளில்...





அமரர்
### K. S. பாலசுப்பிரமணியன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/மீசாலை விக்கினேஸ்வரா ம. வி)
தோற்றம்: 25 - 11 - 1934 மறைவு: 21 - 03 - 1998

திருமதி
### பா. பார்வதியம்மா
தோற்றம்: 05 - 05 - 1935 மறைவு: 08 - 07 - 1997

உருவாக்கி உயர வழிகாட்டிய
அன்புத் தெய்வங்களே ......!
உங்கள் வழிகாட்டலில் வாழ்ந்திட்ட
பசுமையான நினைவுகளுடன் வாழுகின்றோம்
நீங்கள் நடந்த பாதை வழியே......
நாமும் தொடர்ந்து செல்கின்றோம்...
உங்கள் ஆசியும பாசமும் எமக்கென்றும்
நல் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன......
அம்மா! அப்பா! எம் கண்ணீரைக் கண்டு
பொறுக்கமாட்டாத நீங்கள்... அநாதைகளாய்......
தேற்றுவாரின்றி நாம் கதறியழ......
பேச்சற்றுக் கிடந்தீர்களே .....
இத்தனை வேகமாய்க் காலம் கரைந்துவிட்டதா. .?
இன்னும் எம் கண்ணீர் ஓயவில்லை ......
''அமைதியாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா
அமைதியாய்த் தானிருக்கும்''

— பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி வித்யா மகேந்திரன்,
சிவன் கோயிலடி, சாவகச்சேரி.
(சி/4213)

---

## மரண அறிவித்தல்

திருமதி
### மேரி திரேசா சிமியோன் (வேவி)

திருமதி மேரி திரேசா சிமியோன் 6-07-98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் அமரர் ஜோசப் சிமியோன் அவர்களின் அன்பு மனைவியும், மேரி அல்போன்சா (புனிதம்), அன்ரன் ஜோசப் (அமலன் மாஸ்டர்), மேரி பிளசிடா (இதயம்— குருத்துவ கல்லூரி நூலகர், கொழும்புத் துறை), ஜோசப் அலோசியஸ் (முகாமையாளர், வர்த்தக வங்கி, கிராண்ட்பாஸ்), மேரி யூக்கறிஸ்ரா (ராணி—டுபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தநாதர் (சவூதி), வனித்தா, நகீமா (கொழும்பு), இம்மானுவேல் (டுபாய்) ஆகியோரின் மாமியாரும், ஜெயா, ஜெயானந்தன் (சவூதி), ராஜி, அமலி, பிரியா, ஜெசுறான், அருண் சகானி (கொழும்பு), ஜெப் ஜெனிபர் (டுபாய்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அமலன் ஜோசப்
(மகன்)
963/7, வளன்புரம்,
யாழ்ப்பாணம்.
(57440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்

## நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை

அம்பிகை அடியார்களே!

நயினையம்பதியில் எழுந்தருளியிருக்கும் நாகபூஷணி அம்பிகை இன்று தேரேறி அடியவர்கட்கெல்லாம் அருட்காட்சி தருவது அனைத்து மக்களுக்கும் மன நிறைவைத் தருவதாகும். அறுபத்து நான்கு சக்திபீடங்களும் புவனேஸ்வரி பீடமாக எழுந்தருளியிருப்பவள் நயினையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆகும்.

அன்னையின் அருட்கண் பார்வையினால் அனைத்து உயிர்களும் சந்தோஷமாக வாழவும், தேரில் எழுந்தருளி ஆன்மாக்களின் அஞ்ஞான ஒளியை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை ஊட்டவும் அம்பிகை திருவருள் பாலிக்கின்றாள்.

அம்பிகையினுடைய திருவருள் எல்லோருக்கும் சிறந்து விளங்கவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் அருள்புரிவாளாக என்று கூறி ஆசீர்வதிக்கின்றேன்.

''ஞாலம் நின் புகழே யாகவேண்டும்
ஆலவாய் இறையெம்பூாவியே''

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான
சம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்
குருமகா சந்நிதானம்



## அறங்காவலர் சபைத் தலைவர் ஆசி

இன்று எமக்குத் தேவை சாந்தி, சமாதானம். அதற்குரிய ஒரே ஒரு வழி பிரார்த்தனை, வழிபாடு — கலியுகத்திற்குரிய வழிபாடு, பிரார்த்தனை. அதாவது இறை நாம பஜனை, இறைநாமம் ஓதல் ஆகும்.

தினந் தினம் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்பவர் மிக மிகச் சிலரே இவ்வாறு தினமுஞ் சென்று வழிபாடு செய்ய முடியாதவர்கட்கு நைமித்திய வழிபாடு மிக மிக அவசியம். அதாவது வருடத்தில் ஒரு முறை நடைபெறும் மகோற்சவத்தில் கலந்து வழிபாடு செய்தால் பலவிதமான பாவங்களும் நீங்கும் என்பது ஒரு நம்பிக்கை. இந்த வகையில் நைமித்திய விழாக்கள் நடைபெறும் ஆலயங்கள் நம் நாட்டில் பலவுள.

அவற்றுள்ளும் சிறப்பான முறையில் ஆகம விதிமுறைப்படி வழிபாடு நடைபெறும் கோயில்களில் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்மன் கோயில் தனக்கென ஒரு தனமையினைக் கொண்டுள்ளது என்பது அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள் வாய்மொழிக் கூற்றாகவும், எழுத்து மூலமாகவும் நாம் அறிந்து கொண்ட உண்மை. இதனையிட்டு நாம் மன நிறைவடைகின்றோம்.

நீண்ட ஓர் இடைவெளியின் பின்னர் அன்னையின் ஆலயத்தில் கூடி நிற்கும் அடியார்களின் எண்ணிக்கை அளவில. அவர் தம் உள்ளக் குமுறல்களையும் வாய் மொழிப் புலம்பல்களையும் கண்டு, கேட்டுக் கண்ணீர் விடுகின்றோம். தேர் ஏறிப் பவனி வரும் தாய் நல்லன தருவாள். இனி எமக்குக் குறையில்லை'' என்பது இவர்களது அசையாத நம்பிக்கை.

இன்று தேர் ஏறிப்பவனி வரும் தாயின் எழில மித விழாக் கோலக் காட்சியைக் கண்ணாரக் காண முடியாமல் ஏங்கித் தவிக்கும் அத்தனை உள்ளங்கட்கும் உதயன் பத்திரிகை சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டு அவர்களையும் அன்னையை நினைவு கூர வைக்கின்ற செய்தி கண்டு வாழ்த்துகின்றேன்.

இத்தகைய மலரை வெளியிட ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும் யாழ். நயினை இளைஞர்களின் ஊக்கம் தொடர வேண்டும் என ஆசிக்கின்றேன். அத்தோடு நயினைப் பெரியார் ஈழத்து இல்லற ஞானி க. இராமச்சந்திரனாரின் பிரார்த்தனை இனியாகிலும் கை கூட எல்லாம் வல்ல அன்னை அருள் புரியட்டும் என... ''எனக்கென்றோர் வரம் நான் கேட்கவில்லை. என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை. உனக்கெல்லா உயிர்களுமே சொந்தம் என்ற உண்மையினை ஒருபோதும் மறந்ததில்லை, சினங் கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும் சீல முற வேண்டும் என்றே வேண்டுகின்றேன். தனக்கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்தத் தரணிதனில் சாந்தி தனைத் தருவாய் அம்மா''.

**அ. தியாகராஜா**
தலைவர், அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.
நயினாதீவு.

## நயினைத் தல மகிமை

உலகெலாம் ஈன்ற ஒருதனிச் சத்தே
ஒப்பிலாத் தாய்மையின் உருவே;
அலகிலா ஆடல் நாயகன் அகத்தமர்
அன்பினில் விளைந்தநல் அமுதே;
தலமெலாம் சுற்றி வருகினும் நயினைத்
தாயியுனைப் போல் நான் அறியேன்
பலமெலாம் பெற்றேன் உன்னருட் பார்வை
பதித்திடு பரவசம் பெறவே!

- அன்னை அடியான்

## நயினை ஸ்ரீநாகபூஷணி அன்னையின் தேர்த் திருவிழா காட்சியும் மாட்சியும்


**நா. க. சண்முகநாதபிள்ளை**

யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலும் நயினை மாணவர்கள் தம் பெருமுயற்சியால் கடந்த சில வருடங்களாக நயினை நாகபூஷணி அம்மனின் தேர்த் திருவிழாவின் போது அன்னையின் மகத்துவத்தை அச்சுவாகனமேற்றி அடியார்கள் படித்து அவள் அருளில் ஊறித்திளைக்குமாறு சிறப்பு மலர் ஒன்றினை உதயன் செய்தித்தாளில் வெளியிட்டு உவகை கொண்டு வருகின்றனர்.

தனமும், கல்வியும், தளர்விலா மனமும் தெய்வவடிவுந் தந்து அவர்களை அவையிலே முந்திஇருக்கச் செய்து கொண்டிருக்கின்ற நயினை அன்னைக்கு அவர்கள் செய்யும் இந்த அரும்பணியை அன்னை திருவுளங் கொண்டு அவர்களைச் சான்றோர்களாக எண்ணி மேன்மேலும் கல்விப் பெருஞ் செல்வப் பேற்றை அள்ளிக் கொடுப்பாள் என்பதில் எதுவித சந்தேகமுமே இல்லை இந்தப் பணிக்கு உதவிய அனைத்து அருள் நெஞ்சங்களுக்கும் அன்னையின் அருள் கிடைப்பதாகுக.

தேர்த்திருவிழா அல்லது இரதோற்சவம் பஞ்சகிருத்தியங்களில் சங்காரத்தைக் குறிக்குமென ஆகமங்கள் குறிக்கின்றன. சங்காரம் என்பது அழித்தல், ஒடுக்குதல், அடக்குதல் என்று பொருள்படும். அதாவது தனு கரண புவன போகங்களைத் தத்தமது செயல்களில் நிலைத்து நிற்கச் செய்தலை; அவை தோன்றுவதற்கு முதற் காரணமாக இருந்த மாயையில் மீண்டும் ஒடுங்கும் படி செய்தலாகும்.

இந்த வகையில் நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா காட்சியாலும், மாட்சியாலும் மிக உன்னத இடம் பெற்றுள்ளது. அன்னையின் தற்போதைய தேர் 8-7-1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இத்தேர்ப்பணிக்கு ஆயிரமாயிரம் அடியவர்கள் தமது அன்புக் காணிக்கைகளைப் பொற்குகைகளாகவும், காசுகளாகவும் தந்தனர். ஆண்மை[illegible] உழைப்பினை நல்கினர். காசுகளாகத் தந்தவர்களை அனேகம் பேர். அதனாலேயே 1958 இலும் 1986 இலும் வந்த பேரிடர்களையும் எதிர் கொண்டு இன்றும் எடுப்போடும், மிடுக்கோடும் அன்னையைச் சுமந்து திருவுலாவந்து பெருவிழாக் கண்டு பீடும் பேரருளும் சுரக்கின்றது அன்னையின் திருத்தேர்.



அழகு மிளிரும் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

இத்தேருக்கு முன்பிருந்த கட்டுத்தேர் தீயோரால் அழிக்கப்பட்டது. அதற்கு முன்பிருந்த [illegible]ளும், முத்தாலான முத்தேர்களும் அந்நிய ஆதிக்கத்தில் கண்ணியக் குறைவால் கடல் வாய்ப்பட்டு, நுண் கூறுகளாய்ச் சிதைந்து போயின.

தற்போதுள்ள தேரில் ஆலயத்தின் வரலாறு சிற்ப வல்லுநர்களின் கைவண்ணத்தினால் மெய்சிலிர்க்கும்படி சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்த அழகியதேரைப் பார்ப்பதற்கென்றே நயினாதீவுக்குப் பலர் இறைபயணிகளாகச் செல்வர்.

சிற்பக் கலைகளைக் கற்பவர் கலைத்திறன் கண்டிடும் அன்னையின் இத்தேரில் அன்னை எழுந்தருளியதும் அதில் ஒரு திருக்காட்சியும், பெருமாட்சியும் தோன்றும். அன்னை இந்தத் தேரில் ஆனியில் வருவாள். அன்னை வசந்த மண்டப வனப்புறு கொலுவில் தன் வதனம் ஒளிர்ந்திட வழங்கிடும் பூசையை இசைந்து பெற்ற பின்னர், ஏற்றமாக வெள்ளிப்பீடத்தில் அமர்ந்து, அசைந்து அசைந்து மந்திர ஒலியுடனும், பிசைந்த செந்தமிழ் பிழிற்றும் தோத்திரங்களுடனும் எழுந்தருளி வருவாள், அப்போது சென்னியில் அஞ்சலி கூப்புவர் அடியார். திரைகடல் ஒலியென ஆர்த்திடும் மேளம், பன்னிரு திருமுறைகளும், பக்திப்பாடல்களும், ஆடல்களும் பரவசம் மூட்டும்; மெய் சிலிர்த்து உளம் சிலிர்க்கத் திருவருள் கூட்டும்.

அருட்பசியோடு வரும் பக்தர்கள்

வான் முகில்கள் வேப்பமரச் சோலைகளின் மேலாக வந்து [illegible]தல் போலக் கவியும், நான்மறை, வேத மந்திர அதிர்வு நாற்புறமும் வந்து தென்றற் காற்றுடனே மூசும்; நன்மை போல சிறுசிறு தூறல்கள் தேவியின் தெய்வ ஆசிபோல் வீசும்; வடம்தொட்டு திருத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறப்பு மலர் அமைப்பு

நயினை
இளைஞர்கள்
யாழ்ப்பாணம்

1998 ஆம் ஆண்டில் சிறப்பு மலர் வெளியிடுவதற்காக நயினை மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட நன்கொடையில் இருந்தே இச்சிறப்பு மலர் பிரசுரிக்கப்படுகிறது.

- மலர்க்குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள யமாகா – 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. மற்றும் பாவித்த வீட்டுத் தளபாடங்களும் உண்டு. தொடர்பு: ஈனொக் புனிதராஜா, C.S.I. Church தருமனை சத்தியபுரம், உடுவில். [57422]

### தவறிவிட்டது

விளானை களபூமி காரை நகர் என்னும் முகவரியில் 091305912 இலக்கமுடைய கனகரத்தினம் [illegible]யானந்தன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை [illegible] குளிக்கும், நல்லூருக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. [illegible] மேலுள்ள முகவரியில் அல்லது No. 684/6, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [57417]

### தேவை

[illegible] வைத்தியசாலையில் [illegible] வைத்தியரின் வீட்டுக்கு சமையல் அனுபவமுள்ள நல்லொழுக்கமான பணிப்பெண் தேவை. தொடர்பு கொள்ளும் முகவரி: நிர்வாக உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. [57396]

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர்மீன்கள் விற்பனைக்கு உண்டு. [illegible]வானந்தம், இல. 588/8 நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை) நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம். [57418]

### கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா. பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 09-07-98 வியாழக்கிழமை மாலையிலிருந்து விநியோகிக்கப்படும். [illegible]மிடம் பதிவு செய்தோரும் மற்றும் தேவைப்படுவோரும் வந்து பெற்றுக் கொள்ளவும். மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [57422]

### மணமகன் தேவை

45 வயதுடைய இந்து கௌரவ மணமகளுக்கு மணமகன் தேவை. ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கவும். இல. 756, [illegible] உதயன், யாழ்ப்பாணம். (57394)

### கல்வி

ஆரம்ப அறிவையில்லாதவர்களுக்கு குறுகிய காலங்களில் Distintion பெறுபேறடையக் கற்பிப்பதில் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (57397)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்தினருக்கும் உத்தியோகத்தில் உண்டு. 67 ஆம் ஆண்டு பிறந்த மற்ற அச்சுவினி நட்சத்திரமுடைய வவுனியா நிலகத்தில் கடமை புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (57415)

## நயினாதீவு நாகபூஷணி..

(மூன்றாம் பக்கத் தொடர்)

தேரை இழுக்க வருவோர் இறைவியின் அருளை வாரிக் கொள்ள வருபவர் போல அருட்பசியோடுவருவார்கள். தடம் கொடுக்கின்றவர்கள் தேரின் திசையைக் காட்டும் தன்மையையும் மறந்து, அன்னையின் அருள் வீச்சில் தம்மை மறந்து நிற்பர். போகும்மனநிலைஅற்றவராக அடியவர் புரண்டும், உருண்டும் தேரின் பின் போக, சேரும் பெண்களும் அடியழித்துச் சென்று தேர் வரும் வீதியெல்லாம் சேர்ந்து நிறைப்பார்கள். அப்போது சூழும் கடலின் நடுவே அடியவர் கூடும் அலைகளில் மிதந்து வருவது போலத் தேர் ஆடி அசைந்து வரும்.

வீதியெலாம் திருவுலா வந்து திருத்தேர் இருப்பிற்கு வந்ததும் அடியார்கள் ஆரவாரத்தால் கைகளை இசைத்துஅரோகராகோஷம் எழுப்புவர். பொன்னொளிர் அணிகலன்கள் அன்னையில் மின்னும்; குடைகள் ஆலவட்டங்கள்ஆடும்; அடியவர்உளத்தில் அன்னை புகுந்து ஆனந்தக் கூத்து ஆட்டுவிப்பாள் பச்சை உடுத்த பொன் பைங்கிளி போன்று, பகலவன் ஒளி பட்டு மிளிர, இச்சை போச்கிடத்தேரில் இருந்து இறங்கி அருள் அலை வீசி வருவாள். அப்பொழுது அடியார்கள் வேண்டி நிற்கும் தெய்வீகத் தேசு அன்னையின் திருமுகத் தெய்வீக விழிகளில் இருந்து எழுந்து ஒளிவீசும். அடியார்கள் செய்வதறியாது ஆனந்தக் கூத்து ஆடுவர். இதுவே அம்பாளின் தேர்த்திருவிழாத் திருவோலக் காட்சியின் திருவருட் காட்சியும் மாட்சியின் வியப்புமாகும்.

இவ்வாறு உள்ளத்திற்கு இவ்வரும் காட்சியால் ஞானப்பசிதீர, அமுதசுரபி வழங்கும் அன்னதானத்திலே பசியும் தீர்ந்து பேரானந்தம் உண்டாகும். அன்னையின் அருளாட்சி இருந்தவாறு என்னே?

ஓம் சக்தி செய்யும் புதுமைகளைப் பேசு–நல்ல
சக்தியற்ற பேடிகளை ஏசு
சக்தி திருக்கோயிலுள்ள மாக்கி–[illegible]வள்
தந்திடு நற்குங்குமத்தை [திருநீற்றைப்] பூசு

–பாரதி


மீண்டும்

**அறிவுக் களஞ்சியம்**

35 ஆவது இதழ் வெளிவந்து விட்டது!

எமது விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க:

226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்.

தொலை பேசி: 2820

(சி-4211)



**பணிப்பெண் தேவை**

சிங்கப்பூரில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த படித்த குடும்பமொன்றுக்கு வீட்டுவேலைகள் செய்ய சமையல் அனுபவமும், நல்லொழுக்கம், சுத்தம், பணிவும் நிறைந்த 27 வயதிற்குட்பட்ட திருமணமாகாத இந்துப் பணிப்பெண் தேவை. மாதச் சம்பளம் 2,200 ரூபா. போகவர இலவச விமானச் சீட்டு. ஏஜன்ட் யாருமில்லை. புகைப்படம், விலாசம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 753,
மே/பா உதயன்.

(சி/ 4158)



கல்வியுலகுக்கு அளப்பரிய பணிபுரிந்து
அமரத்துவம் எய்திய
பண்டிதர்

**பொன். கந்தையனார்**

அவர்களின்

**31 ஆம் நாள் நினைவாக**

எமது பாடசாலை வரலாற்றில் தனியிடத்தினைத் தாங்கள் பெற்று விட்டீர்கள். பாடசாலையின் உயர்வுக்காகத் தாங்கள் ஆற்றிய பணிகளை அவற்றால் பயன் பெறுபவர்கள் போற்றித் துதிக்கின்றனர். க. பொ. த. [சா/த] வரை மாணவர்கள் பயில்வதற்கு வாய்ப்பளித்தீர்கள். பயின்றவர்களும், போதித்தவர்களும் நெஞ்சுருகி நிற்கின்றனர். திருநாவுக்கரசு மடாலயத்தாருடன் கலந்து பேசிக் கட்டடங்களையும், காணியையும் பெற்றுத் தந்தீர்கள். இந்த வசதிகளை அனுபவிப்பவர்கள் ஒரு புறமும், நல்லாசிரியனாகவிருந்து உருவாக்கிய பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் மறுபுறமும் தங்கள் பிரிவால் வாடுகின்றனர். இப்பாடசாலையை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்த வேண்டுமெனக் கனவு கண்டீர்கள். அதனைத் தாங்கள் வாழ்ந்த காலத்திலே நனவாகவும் கண்டு விட்டீர்கள். இயற்கை தங்கள் உலக வாழ்விற்கு எல்லை போட்டு விட்டது. இது இறைவன் செயல். தங்கள் பிரிவால் மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். ஈடு செய்ய முடியாத பேரிடைவெளியை ஆண்டவன் நிரப்புவானாக.

தங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச்சபையினர், பழைய மாணவர்கள்.
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு
மகா வித்தியாலயம்

(57419)


## மேலும் 56 குடும்பங்களுக்கு

# ஈச்சமோட்டைப் பகுதியில் ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

கொழும்புத்துறை, ஜூலை8

யாழ். ஈச்சமோட்டை ஜே. 66 கிராமசேவகர் பிரிவில் மொத்தம் 629 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வு பணம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரிவில் 6 ஆவது தடவையாக மேலும் 56 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுப் பணம் ஐந்து ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தைப் பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் கொழும்புத்துறை வீதியில் உள்ள இப் பகுதிக் கிராமசேவையாளர் பணிமனையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பட்டியலில் பெயர்கள் உள்ளோர் தங்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை, வங்கிப் புத்தகம், ரூபா 5 பெறுமதியான முத்திரை ஆகியவற்றுடன் அலுவலக நேரத்தில் தம்மை நேரில் சந்திக்குமாறு இப் பகுதிக் கிராமசேவகர் சி. க. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (இ–30)

## குழுக்கள் அமைப்புக்கூட்டம்

வலிகாமம்தெற்கு ஜூலை8

கல்விக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு ஒழுங்காக வரச் செய்வதற்கான குழுக்களை அமைப்பதற்கான சிறப்புக் கூட்டமொன்று மருதானர்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற உள்ளது. (இ–152-9)

## டக்ளஸ் தாக்குதல் விவகாரம்

# சிறைச்சாலை அதிகாரிகள் மீது தவறு இல்லை

## விசாரணைக் குழு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

"களுத்துறைச் சிறைச்சாலையில் ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட சம்பவத்தில் அந்தச் சிறைச்சாலை அதிகாரிகள் எவரும் தவறிழைக்கவில்லை."

இப்படி களுத்துறைச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தாக்குதல் சம்பவம் இடம் பெற்றபோது டக்ளஸ் தேவானந்தாவைக் காப்பாற்ற சிறைச்சாலை அதிகாரிகள் கடும் முயற்சிகளை எடுத்தனர் எனவும்—

அதி உச்ச அளவில் தமது கடமைகளை நிறைவேற்றினர் எனவும்— அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் களுத்துறைச் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுகாற்று நடவடிக்கைஎடுக்க வேண்டிய தேவை எழவில்லை எனவும் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

விசாரணைக்குழுவின் இந்த அறிக்கை கடந்த4ஆம் திகதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கே. டபிள்யு. ஈ. கரல்வியத்தையால் நீதி அமைச்சர்ஜீ.எல். பீரிஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேகநபர்களைச் சந்திக்க வெளியார் எவருக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என சிறைச்சாலை அதிகாரிகள் நீதி அமைச்சிடம் கோரியுள்ளார். (இ–10)


**அறிவியற் கருத்தரங்கு**

தொடர் - 19



"சமூக மேம்பாட்டுக்கான கலைகள்"

கலாநிதி
என். சண்முகலிங்கன்
தலைவர்,
அரசறிவியல் – சமூகவியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்.

09 – 07 – 1998
வியாழன்
மாலை 3 – 30 மணி

யாழ்/ இணுவில்
மத்திய கல்லூரி

**தெஸ்பியன் கலை வட்டம்**

இணுவில்.

(57429)



உ

கைதடி - கயற்றசிட்டி
அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான

**தீர்த்தத் திருவிழா விஞ்ஞாபனம்**

நிகழும் வெகுதானிய வருடம் ஆனித் திங்கள் 25 ஆம் திகதி (09 - 07 - 98) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விசேட கிரியைகளுடன் ஆரம்பமாகி பகல் 11-00 மணிக்கு நிறைவு பெறும்.

அதனைத் தொடர்ந்து
இணுவையூர் செஞ்சொற் செல்வர்
திரு ஆறு. திருமுருகன் அவர்களால்

**திருமந்திரம்**

என்னும் விடயம் பற்றி தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் தவறாது சமுகந்தந்து முருகன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஷ்டி ஆலய பரிபாலன சபை

கைதடி வடக்கு. (57428)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வன்னிப் பகுதியில்

# வாந்திபேதி நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வன்னியில் வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற போதும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டுசுட்டான் பகுதியில் மட்டும் இதுவரையும் 12 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக வவுனியா, மன்னார்ப் பகுதிகளிலிருந்து மக்கள் வன்னிக்குச் செல்வதற்கும், வன்னிப்பகுதி மக்கள் இப் பகுதிகளுக்குச் செல்வதற்கும் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-ரீ-5)

**NEW SCIENCE COLLEGE**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்,

இரசாயனவியல்

திரு. மகேஸ்வரன்

2000 A/L - வியாழன் 9 00 Am

99 A/L - வியாழன் 10 00 Am

ஆரம்பம்: 09 - 07 - 98

(57420)

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

**கேள்விப் பத்திரங்கள்**

இசுசு 05 தொன் லொறிக்கு பழைய உடற் கோப்பு நீக்கி புதிய உடற் கோப்பு அடிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. திருப்பி வழங்கப்படாத கட்டுப் பணம் ரூபா 100 திருப்பி வழங்கப்படும் கட்டுப் பணம் ரூபா 250 சங்க காசாளரிடம் செலுத்தி 15 - 07 - 98 பிற்பகல் 4-00 மணி வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 18 - 07 - 98 பிற்பகல் 1-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

06—07—98

(சி-4209)

**பாராட்டுகின்றோம்**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்
பிரதி அதிபராகக் கடமையாற்றிய

**திரு. மு. பரஞ்சோதி**

அவர்கள்

3 - 6 - 1998 இல் இருந்து கலாசாலை அதிபராகக் கடமையேற்றுக் கொண்டதையிட்டு ஆசிரிய மாணவர்களாகிய நாம் வரவேற்றுக் கொள்வதுடன் எமது பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

- 2ஆம் வருட ஆசிரிய மாணவர்கள்
கோப்பாய் ஆசிரியகலாசாலை

(57414)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 — 02 — 1956

உதிர்வு 02 — 07 — 1993

**திருமதி சி. இந்துமதி**

வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துரியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங்காலமே.

இந்து உன் நினைவுகள் நித்தமும் எங்களை ஏங்க வைக்க ஏன் எங்களை மறந்து போனாய்?

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

அம்மா, அக்காமார்
அத்தான்மார், பெறாமகன்,
உற்றார், உறவினர்கள்.

(55447)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் சு. நாகேந்திரன் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் சாவகச்சேரிமாவட்ட நீதிமன்றத்திற்கு கடந்த 29ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-5-9)

## கயிறு திரிக்கும் கைத்தொழில்

செம்பியன்பற்று ஜூலை 8

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் கயிறு திரிக்கும் சுயதொழில் முயற்சியில் 10 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டுவருகின்றன.

இப்பகுதிகளில் உள்ள கயிற்றுத் தேவையை இவர்களே ஈடுசெய்து வருகின்றனர்.

இப்பகுதிக்குகடற்றொழில் உபகரணங்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்ட பின்பு கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான கயிற்றையும்இவர்களேவழங்கிவருகின்றனர்.

(இ-35-9)

## வருடாந்த பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஜூலை 8

ஆவரங்கால் ஸ்ரீ நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதிபர்எஸ். முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும். இந்த விழாவுக்கு யாழ். கல்வித்திணைக்கள பொறியியலாளர் கே. சிவபாலனும். சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆ. இராஜேந்திரனும் கலந்து கொள்வார்கள்.

(இ-173)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 8

திருநெல்வேலி ஞானக் குழந்தை முன்பள்ளிக் கல்வி நிலைய பாலர் விளையாட்டு விழா நாளை வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் செல்வி சகுந்தலாதேவி தலைமையில் நடை பெறும்.

பிரதம விருந்தினராக கலாநிதி சிவலிங்கராஜாவும் பாரியாரும் —

சிறப்பு விருந்தினர்களாக பலாலி ஆசிரியர் கல்லூரி முதல்வர் கவிஞர் சோ.பத்மநாதனும், பாலர் கல்வித் தலைவர் [illegible] கலந்து கொள்வார்கள்.

(இ-ரீ)

உ

நீர்வேலி

அருள்மிகு

செல்லக் கதிர்காம சுவாமி கோயில்

**தேர்த் திருவிழா**

08 - 07 - 98 புதன்கிழமை

காலை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும்.

காலை – 9.00 மணி வசந்தமண்டபப் பூசை.

காலை – 10.00 மணி வள்ளிதேவா சமேத ஆறுமுகப் பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருதலும்,

நண்பகல் 12.00 மணி சுவாமி தேரில் இருந்து இறங்குதலும் நடைபெறும்.

விசேட மேளக்கச்சேரிகளும் இடம்பெறும்.

அனைவரும் வருக முருகன் அருள் பெறுக.

உபயகாரர்:
சி. கிருஷ்ணபிள்ளை,
ஆனந்தன் குடும்பத்தினர்.

நீர்வேலி.

(57421)

**வாருங்கள்!**

**கண்டு களியுங்கள்!**

சண்டிலிப்பாய்
கல்விக்கோட்டப் பாடசாலைகள்
நடத்தும்

**விஞ்ஞானக் கண்காட்சி 1998**

இடம்: யாழ் – மானிப்பாய் இந்துக்கல்லூரி

காலம்: ஜூலை 9 வியாழனும்
ஜூலை 10 வெள்ளியும்
(முற்பகல் 9-00 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரை)

தலைவர்: திருமதி றெயினா இருதயநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்க் கோட்டம்)

பிரதம விருந்தினர்: திரு. சி. சிவராசா
(கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம் - 2)

★ மேற்படி கண்காட்சியில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், கணிதம், சுகாதாரம், விவசாயம் போன்ற பிரிவுகளும்; நவீன தொழில் நுட்பப் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிரவேசம்: மாணவர் ரூபா 5
ஏனையோர் ரூபா 10
(மாணவரல்லாதோர் பி. ப. 1-00 மணிக்குப் பின் அனுமதிக்கப்படுவர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விஞ்ஞானக் கண்காட்சி
அமைப்புக் குழு

கோட்டக்கல்வி அலுவலகம்,
சண்டிலிப்பாய்.

(சி/4205)

ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணரங்கம் பிரவேசம்
1924 — 02 — 11

விண்ணரங்கம் பிரவேசம்
1989 — 07 — 08

**நடிகமணி வி.வி.வைரமுத்து**

என்றும் எங்கள் நெஞ்சத்தில்
இருக்கும் ஐயா! நடிகமணி
சென்றும் புகழில் வாழ்கின்றாய்
சிறிதும் நாங்கள் மறவோமே.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள், பெறாமக்கள்.

வசந்தகான சபை,
காங்கேசன்துறை.

(57393)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
யா/ஈச்சமோட்டை கலட்டிப்புலம்
அருள்மிகு

## ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்
## அலங்கார உற்சவம்-1998

**08-07-98 புதன் முதல் 22-07-98 புதன் வரை**
( பதினைந்து நாள்கள் )

முதல் பதின் நான்கு நாள்களும் பிற்பகல் 3. 00 மணிக்கு அபிஷேகமும், தொடர்ந்து வசந்தமண்டபப் பூசையும், சுவாமி உள் வீதி வலம் வருதலும் இடம் பெறும்.

இறுதி நாள் ( 22/07/98 ) காலை 10. 30 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து வசந்த மண்டப் பூசையும், பிற்பகல் 3 மணிக்கு சுவாமி வழமையான வீதி வழியாக வெளி வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

23 - 07 - 98 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம் பெறும்.

பரிபாலன சபையினர்,
(57309)

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 — 08 — 1917
மறைவு 11 — (7 — 1995

திருமதி
**பவளம் ஐயாத்துரை**
திதி: 08 - 07 - 1998

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பிரதான வீதி,
சங்கானை,
(57354)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராஜா ஸ்ரீபிரபாகரன்**

மலர்வு 22 - 05 - 1962
உதிர்வு 07 - 07 - 1990

பண்ணில் எங்களை விட்டு மறைந்தீர்
மறையா நினைவுடன் கலங்குகிறோம்
அன்பே உமதாத்மா சாந்திபெற என்றும்
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, தாய், சகோதரன்.

64/3, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(57392)

## பன்னிருதிருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்தும் பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வேஸ்வரர் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதலும், பன்னிரு திருமுறைப் பாராயணமும் இடம்பெறவுள்ளன.

(இ-8)

## கண்காட்சி

வடமராட்சி, ஜூலை 8
திருநெல்வேலியிலுள்ள பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஸ்ரீ இராமகிருஷ்ணவிவேகானந்த புத்தகக் கண்காட்சி நாளை மறுதினம் 10ஆம்திகதி நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம் ஏற்பாடுசெய்துள்ள இக்கண்காட்சியை கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன்திறந்து வைப்பார்.

(இ-178-9)

## வரலாறு மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை8
ஜி சீ ஈ உயர்தர வகுப்பில் வரலாற்றைப் பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர்.

[இ-8]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 8
கல்விப் பணிப்பாளர் அமரர் க. இரத்தினராசா அவர்களின் நினைவாக ''கலங்கரை விளக்கு கல்விப் பணிப்பாளர் இரத்தினராசா'' என்னும் நூல் இம் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் யாழ். பல்கலை துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் வெளியிடப்படும்.

பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார். (இ-ரி)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8
''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''அகவொளி'' குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு கருத்துரை ஆற்றுவார். (இ-ரி)

## கபடிச் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ். மாவட்டத்தில் கபடி விளையாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கபடிச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டில் அக்கறையுள்ள விளையாட்டுச் சங்கங்களும், பொதுமக் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 15 — 03 — 1955
உதிர்வு 10 — 05 — 1998


**திருமதி வசந்தாபுஷ்பராணி யேசுதாசன்**
[கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை]

இரவென்றும் பகலென்றும் பாராது
எமது வாழ்வு உயர்வுபெற
கண்விழித்துக் கல்வி புகட்டி அன்புடன்
வளர்த்த அம்மா!
எம்மைக் கதறவிட்டு எங்கு போனீரோ?

உமது பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன்.
அருமைப் பிள்ளைகள்.

353C, பணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(57387)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் பண்டித வித்துவான்
**பொன். கந்தையனார்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

மலர்வு (8 - 02 - 1923
உதிர்வு 08 - 06 - 1998

புன்சிரிப்புத் தவழும் பொன்முகமே!
குடும்பச் சுமை சுமந்த குன்றாமணி விளக்கே!
எம் இதயத்திற் குடிகொண்ட
அன்புத் தெய்வமே!
உங்களை நாம் இனி எப்போது காண்போம்?
எம் உயிர் உள்ளவரை தங்களின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

## நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர் பொன். கந்தையனார் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டதும் ஓடோடி வந்து ஆறுதல் கூறியும், இறுதிச் சடங்கிலும் இறுதி யாத்திரையிலும் பங்கு கொண்டும், பலவழிகளிலும் உதவிகள் புரிந்தும், அனுதாபச் செய்திகள் கடிதங்கள் அனுப்பியும் ஆறுதல அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
(57412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# உதயன்

## திட்டமிட்ட உதவி தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்களில் கப்பல் மூலம் திரும்பி வருவோரை மீளக் குடியமர்த்த விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் என்று அறியப்படுகிறது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடனும், வடமாகாண புனர்வாழ்வு, புனர்நிர்மாண அதிகார சபையின் அனுசரணையுடனும் இந்த விசேட திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

இரண்டே முக்கால் வருடங்களுக்குப் பின்னர், வாழ்க்கையில் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துவிட்டு, தமது சொந்த இடத்துக்குத் திரும்பும் அவர்களுக்குத் திட்டமிட்ட முறையில் உதவிகள் செய்யப்படுவது மிகவும் அவசியமாகும்.

இடம்பெயர்ந்து ஆறு மாதங்களின் பின்னர், 1996 ஏப்ரல் மாதத்தில், திரும்பி வந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு திட்டமிட்ட வகையில் உதவப்படவில்லை. எழுந்தமானத்தில் அதில் ஒன்றும் இதில் ஒன்றுமாக ஒரு சில உதவிகளே செய்யப்பட்டன.

இப்போது — இரண்டே முக்கால் வருடங்களுக்குப் பின்னர் — சொந்த இடம் திரும்புவோர் முந்திய சாராரை விட மிக அதிகமாக நொந்தவர்கள்.

அவர்கள் இங்கு வந்து சேர்ந்த பின்னர் என்ன உதவி செய்யலாம், எவ்வாறு மீளக்குடியமர்த்தலாம் என்று யோசித்துக் கொண்டிராமல் உகந்த திட்டம் ஒன்றை வகுத்து முன்னேற்பாடாகவே ஆயத்தங்களைச் செய்து உதவ வேண்டும். இப்போதாவது அரசுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இது விடயம் புரிந்திருப்பதும் அதற்கேற்றவாறு செயற்பட முனைந்திருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

யாழ்ப்பாணம் வருவதற்கெனக் கப்பலை எதிர்பார்த்து திருகோணமலையிலும், வவுனியாவிலும், மன்னாரிலுமாக மூவாயிரத்துக்கும் அதிகமானோர் காத்துக்கிடக்கிறார்கள். ஒழுங்கான கப்பற் சேவைக்கு இன்னும் வசதி செய்யப்படவில்லை. திருகோணமலையில் இடைத்தங்கலாக பல மாதங்களாகக் காத்திருப்போர் உண்ணாவிரதம் இருந்தும் பயனில்லை.

மீளக்குடியமர்வுக்கு விசேட திட்டம் வகுப்பது போல அகதிகள், இடம்பெயர்ந்தோர் பயணத்துக்கும் விசேட திட்டம், விசேட ஏற்பாடு தேவை.

மேலும் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு — தமது சொந்த இடத்துக்கு — திரும்பி வந்து மீளக்குடியமர விரும்புவோரின் தகுதியைச் சோதிப்பது ஒரு வகைக் கட்டுப்பாடே. இக்கட்டுப்பாடு மீளக்குடியமர்வின் நோக்கத்தையே இல்லாமற் செய்து விடுகிறது. இது சம்பந்தமாக மீள்பரிசீலனை செய்து அந்தக் கட்டுப்பாட்டை நீக்குவதும் அவசியம்.

# நகரில் விநியோகிக்கப்படும் பாலில் தண்ணீர் கலப்பு

## பரிசோதனையின் போது கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

பசுப் பாலில் தண்ணீர் கலக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பால் அழிக்கப்பட்டதுடன் பால் வியாபாரிகளும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

யாழ். நகரில் வீடுகளுக்கு கொண்டு சென்று பால் விநியோகம் செய்பவர்களின் பால் யாழ். சுகாதார திணைக்கள பரிசோதனைக் குழுவினரால் சோதனைகுட்படுத்தப்பட்ட போதே இந்தக் கலப்படம் பற்றி தெரிய வந்தது.

இப்பாலில் 50 சதவீதத்துக்குமேல் தண்ணீர் கலக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

லக்ரோ மீற்றர் கருவி மூலம் நடத்திய சோதனைகளின் போதே இக்கலப்படம் பற்றி கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுவில், கோண்டாவில், தாவடி ஆகிய இடங்களிலிருந்து யாழ். நகருக்குச் சென்று பால் விநியோகிப்பவர்களில் சிலரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-135)

## ஆரியகுளத்தில் படரும் ஆகாயத் தாமரை

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் மீண்டும் ஆகாயத்தாமரை எனப்படும்நன்னீர் களை வேகமாகப்பரவிவருகின்றது.

ஐக்கோரியா என்னும் தாவரவியல் பெயருடைய இந்த ஒரு தாவரத்திலிருந்து பல தாவரங்கள் தோன்றுவதால் மிக வேகமாக இது இனம் பெருகிப் பரவும் தன்மையுடையது.

இந்த களை குளத்தை மூடி வளர்வதனால் குளத்தினுள் ஒளி செல்லுதல் தடைப்படுவதுடன் நீர்வாழ் உயிரினங்கள் இறக்கவும் நேரிடும். அத்துடன் இக்களையினால் நன்னீர் சூழல் அதிகளவில் மாசுபடவேண்டியும் ஏற்படும்.

1993ஆம் ஆண்டளவில் மேற்படி குளத்தில்இந்தவகைக் களைகள் பரவி குளத்தை மூடியதால் யாழ். மாநகரசபையினர் பெரும் பணச்செலவில் அவற்றை அள்ளி குளத்தைச் சுத்திகரித்தனர்.

இக்களைகள் பரவுவதற்கு முன்னர் நடவடிக்கை எடுத்தால் நல்லது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரீ)

## இத்தாலிய பெண்ணைக் கொன்றுவிட்டு தப்பி வந்த இலங்கை இளைஞன்

கொழும்பு, ஜூலை 8

இத்தாலியிலுள்ள மிலான் நகரில் பணியாற்றி வந்த இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கோடீஸ்வரியான இத்தாலியப் பெண் ஒருவரை கொலை செய்துவிட்டு இலங்கைக்குத் தப்பி வந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞரை தம்மிடம் ஒப்படைக்குமாறு இத்தாலியப் பொலீஸார் இத்தாலிய அரசு மூலமாக இலங்கை அரசிடம் கோரியுள்ளனர்.

52 வயதான எரிகா வெமஹரா என்ற அந்தக் கோடீஸ்வரியைப் படுகொலை செய்த பின்னர் இலங்கைக்கு தப்பி ஓடிவந்த அந்த இளைஞன் கொலன்னாவைப் பகுதியில் மறைந்திருப்பதாக இத்தாலியில் இருந்து வந்துள்ள இரு பொலிஸ் அதிகாரிகள் இத்தாலிய அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காரணமாக மிலான் நகரில் இலங்கையர்களுக்கு எதிராக எதிர்ப்பு உணர்வு உருவாகி வருவதாகவும் —

இலங்கையர்கள் வெளியேற்றப்படுவார்களானால் மிலான் நகரில் தொழில் செய்யும் 6 ஆயிரம் இலங்கையர்கள் வேலை இழக்கும் ஆபத்து உருவாகி இருப்பதாகவும் ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-10)

# ஜி.ரி.இஸற் மூலம் மாதாந்தம் 46 லட்சம் லீற்றர் தண்ணீர்

## யாழ். நகரப்பகுதியில் விநியோகம்

யாழ்ப்பாண நகரப் பகுதியில் ஜி. ரி. இஸற்' எனப்படும் ஜேர்மன் தொழில் நுட்ப உதவியின் குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 45 லட்சத்து 22 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் 19 ஆயிரம் மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

யாழ். மாநகர சபை குடிதண்ணீர் வழங்கல்ப் பிரிவுக்கு ஜேர்மன் தொழில் நுட்பஉதவித்திட்ட ஆலோசகராகப் பணியாற்றும் பொறியியலாளர் வே. நவரட்ணராஜா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இத் திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜேர்மன் தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் இந்த அவசர குடிதண்ணீர் வழங்கல் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ். மாநகர சபை எல்லைக்குஉட்பட்ட பிரதேசத்தில்30 குடிதண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த 30 தாங்கிகளினதும் மொத்த தண்ணீர்க் கொள்ளளவு 45 ஆயிரத்து 700 லீற்றர் ஆகும்.

திருநெல்வேலிப் பகுதியில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு ஒவ்வொரு தாங்கிக்கும் பவுசர் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்துக்கு மாதாந்தம் சராசரியாக 72 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டு வருகின்றது.

1997 ஏப்ரல் மாதத்தில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை குருநகர் தண்ணீர்த் தாங்கி மூலம் குருநகரின் ஒருபகுதிக்கு குழாய் மூலம்மாதாந்தம்25 லட்சத்து 83 ஆயிரத்து 500 லீற்றர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சில இடங்களில் ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தால் வைக்கப்பட்டுள்ள குடி தண்ணீர்த்தாங்கிகளின் பூட்டுக்கள் சில விஷமிகளால் உடைத்துச் சேதமாக்கப்படுகின்றன.

கடந்த வாரம் இராசாவின் தோட்டம் றக்கா வீதிச் சந்தியில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால் வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தாங்கியிலுள்ள பூட்டுக்கள் உடைக்கப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தாங்கியும் மீளப்பெறப்பட்டுள்ளது. அப்பகுதியிலுள்ள மக்கள் பொறுப்பெடுத்து தண்ணீர்த் தாங்கியைப் பராமரிக்க முடியும் என்றால் மீண்டும் நாம் அவ்விடத்திலே தண்ணீர்த் தாங்கியை வைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

இப்படி அவர் கூறினார். (இ-5-6)

### நாளை

ஆனி - 25

வியாழக்கிழமை

திதி: பூரணை

முன்னிரவு 10.20 வரை.

நட்சத்திரம்: பூராடம்

பின்னிரவு 04.43 வரை.

சுபநேரம் 70.28 - 08.58

ராகுகாலம்: 01.28 -2 0.58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரம்)

### உதயவாக்கு

அறிவின் முதல் பாடம் செல்வத்தை வெறுப்பது; அன்பின் முதல்பாடம் செல்வத்தை அனைவருக்கும் வழங்குவது.

— நபிகள்

## இன்னிசை நற்செய்திப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 8

பிரபல பாடகரும், இறைபணியாளருமான தந்தை பெர்க்மான்ஸ் அவர்களின் இன்னிசை நற்செய்திப் பெருவிழா நாளை முதல் நடைபெறுகிறது.

நாளை 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கிலும்—

15 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலும்—

18 ஆம் 19 ஆம் திகதிகளில் கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்திலும் இந்த இன்னிசை நற்செய்திப் பெருவிழா நடைபெற உள்ளது.

ஒவ்வொரு நாளும் மாலை 3.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். (இ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை8

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை8 மணிக்கும் தீர்த்தத்திருவிழா நாளை காலை 8 மணிக்கும் நடைபெறவுள்ளன.

(இ - 30-103)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை8

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமைகாலையும் தீர்த்ததிருவிழா நாளையும் பூங்காவனம் திருவிழா நாளை மறுதினமும் இடம் பெறும்.

(இ-30)

★ ★ ★

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோயிலின் வருடாந்ததேர்த்திருவிழாஇன்று புதன்கிழமை காலை நடைபெறும்.

நாளை காலை தீர்த்தத் திருவிழா இடம் பெறும்.

(இ - 30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 8

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை காலையும் நடைபெறும். (இ-30)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

தீர்த்தத் திருவிழா நாளை முற்பகல் 11 மணிக்கும் நடைபெறும்.

(இ-30-8)

நெல்லியடி, ஜூலை 8

தென் புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று புதன் காலை 10 மணிக்கும், தீர்த்தம் நாளை வியாழன் காலை 10 மணிக்கும், பூங்காவனம் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும் நடைபெறும். (இ-3-109)

★ ★ ★

சண்டிலிப்பாய் அருள்மிகு கல்வளைப் பிள்ளையார் கோயிலின் மஹோற்சவத் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை காலையும் நடைபெறவுள்ளன. (இ-30)

கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை 10 மணிக்குபூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும், 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கொக்குவில் — நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள்ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

காலை 7.30மணிக்குவசந்த மண்டபப் பூசையை அடுத்து அம்பாள் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

நாளை பூரணை தினம் காலை 7 - 30 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(இ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 8

மிருசுவில் கோயிற்குளம் கண்ணகை அம்மன் வருடாந்த இரதோற்சவம் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும். மறுநாள் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ-ரீ)

★ ★ ★

நவாலி, ஜூலை 8

வண் வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன் காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

தீர்த்தோற்சவம் நாளை 9ஆம் திகதியும் பூங்காவனம் 10 ஆம் திகதியும் இடம்பெறும். (இ-30-100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா உடனடியாக புதுடில்லி செல்லமாட்டார்!

புதுடில்லி, ஜூலை 8

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாயைச் சந்திப்பதற்காக உடனடியாக டில்லி செல்லமாட்டார்.

நேற்று அ.தி.மு.க நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் பொதுச்செயலாளர்களான கே. ஏ செங்கோட்டையனும், எம். சின்னச்சாமியும் பேசுகையில் இம் மாதம் 10 ஆம் திகதி ஜெயலலிதா பிரதமரைச் சந்திப்பார் என்ற பத்திரிகைச் செய்திகளை மறுத்தனர்.

அண்மையில் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸுடன் ஜெயலலிதா நடத்திய சந்திப்பை அடுத்து வாஜ்பாயை அவர் புதுடில்லியில சந்தித்து பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அச்சந்திப்பு தற்பொழுது நடைபெறமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா எப்பொழுது தலைநகர் செல்வார் என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு பிரதமருக்கும், ஜெயலலிதாவுக்கும் வசதியான

**உலக அரங்கில்**

திகதியில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

வாஜ்பாய் அமைச்சரவையில் அ. தி. மு. கவிற்கு கூடுதல் அமைச்சர் பதவிகளைக்கொடுக்க வேண்டுமென்று புதிதாக கோரிக்கை விடுத்திருப்பதாகக் கூறப்படுவதை மறுத்த அவருக்கும் சென்ற மே மாதம்தான் ஜெயலலிதா இந்தப் பிரச்சினையை எழுப்பியதாகத் தெரிவித்தனர். (இ-8)

## பஸ் விபத்தில் 30 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 8

ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள சிம்லாவிலிருந்து பக்தர்களை ஏற்றி வந்த பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் 30 பேர் வரை உயிரிழந்தனர்.

50 – க்கு மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-8)

## சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் தங்கத் தகடு!

### கேரள நீதிமன்றம் அனுமதி

கொச்சி, ஜூலை 8

சபரிமலையில் உள்ள ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் உள்ள கருவறை ரூபா ஒரு கோடி 75 லட்சம் (இந்திய ரூபா) செலவில் தங்கததினால் வேயப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை பிரபல தொழில் அதிபரான விஜய் மல்லையா என்பவருக்கு கேரள உயர் நீதிமன்றம் வழங்கி உள்ளது,

ஐயப்பன் ஆலயத்தில் 'ஸ்ரீ கோவில்' என அழைக்கப்படும் கருவறையில் தமது காணிக்கையாக ரூபா $1\frac{3}{4}$ கோடி செலவில் தங்கத்தகடுகள் வேய்வதற்கு விஜய் மல்லையா விருப்பம் தெரிவித்திருந்தார்.

இதற்கு ஆலய தந்திரியும் அனுமதி கொடுத்தார்; இப்பணிக்கு 31 கிலோ தங்கமும் 1984 கிலோ செப்பும் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் திருவாங்கூர் தேவஸ்தான முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பக்தர்களில் ஒரு கோஷ்டியினர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

தங்கத் தகடுகளால் வேயப்பட்டால் ஆலயப் பாதுகாப்புக்காக லட்சக்கணக்கில் செலவிடவேண்டி வரும் என்று அவர்கள் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

தங்கத் தகடுகள் வேயும் பணிக்குப் பதிலாக மல்லையா, பக்தர்களுக்கு குடிநீர்வசதி, இலவச உணவு போன்றவற்றைச் செய்துதரலாம் எனறும் யோசனை தெரிவிக்திருந்தனர்.

இது தொடர்பான மனுவை விசாரித்த நீதிபதிகள் மனுதாரர்களின் வாதங்களை நிராகரித்தது -ன் விஜய் மல்லையாவுக்கு அனுமதி அளித்துத் தீர்ப்புக் கூறினர். (இ-10)

## இந்தியாவில் ரயில் விபத்து

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 3பேர் கொல்லகலப்பட்டனர் சுமார் 20 பேர் காயமடைந்தனா.

இரு ரயில்களும் குறைந்த வேகத்தில் சென்றதால் குறைந்தளவு இழப்புகளே ஏற்பட்டுள்ளன என ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ரீ)

## தாக்குதல்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தொழுகைச் சங்கு ஒலித்த நேரத்தில் வியாபாரம் நடத்திக்கொண்டிருந்த சுமார் 20 வியாபாரிகள் தலிபான் குழுவினரினால் தாக்கப்பட்டனர்.

## உலகக் கிண்ணத் துணுக்குகள்

### கார்களுக்கு தீவைப்பு

நெதர்லாந்து யூகோஸ்லெலவியாகளுக்கு இடையிலான போட்டிகள் நடைபெற்றபோது ஸ்டேடியத்துக்கு வெளியே ராட்சத திரையில் பார்த்துக் கொண்டிருந்த இங்கிலாந்து பிரான்ஸ் ரசிகரகளிடையே கைகலப்பு ஏற்பட்டது.

சற்று நேரத்துக்கெல்லாம் இது பெரும் மோதலாக வெடித்து ஸ்டேடியத்தின் சுற்றுப்புறம் முழுதும் பரவியது. உள்ளூர் இளைஞர்கள் பலர் அங்கிருந்த கார்களைத் தீக்கிரையாக்கினர்.

இதையடுத்து ராட்சத திரையில் கால்பந்து ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது. வன்முறைச் சம்பவம் தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 9 பேர் உள்ளூர்வாசிகள்; ஒருவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.

(இ-10)

### வீரர் மீது தண்ணீர் ஊற்றிய ரசிகர்

உலகக்கோப்பை கால் பந்து போட்டியில் பங்கேற்றுவிட்டு ஜப்பானிய அணி தாயகம் திரும்பியது.

தோல்வியுடன் திரும்பினாலும் உலக அணிகளுக்கு சவால் விட்டு ஆடிய பெருமை ஜப்பான் அணியினருக்கு இருந்தது. ரோக்கியோ சர்வதேச விமானநிலையத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் தாயக வீரர்களை வரவேற்கத் திரண்டிருந்தனர்.

இருப்பினும் அணியின் செயற்பாட்டில் அதிருப்தி கொண்ட 30 வயதுடைய ரசிகர் ஒருவர் ஜப்பானிய வீரர் ஷே ஜி ஜோ மீது ஆத்திரத்துடன் தண்ணீரை ஊற்றினார். ''ஷே ஜிபிடம் நிறைய எதிர்பார்த்தேன்; என்னைப் போன்ற ரசிகர்களை ஏமாற்றி விட்டார்'' என்றார் அந்த ரசிகர் வெறுப்புடன்.

(இ-ரி-10)

### ரசிகருக்கு அபராதம்

பாரீஸ், ஜூலை,8

16 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் மைதானம் அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த பிரிட்டிஷ் உதைபந்தாட்ட ரசிகர் ஒருவருக்கும், ஹோட்டல் ஊழியர்களுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் சண்டையில் முடிந்து பொலீஸ் வரை சென்றுள்ளது.

உலகக் கிண்ண போட்டிகளின் வெற்றி தோல்வி தொடர்பாக பிரிட்டிஷ்ரசிகருக்கும் ஹோட்டல் ஊழியர்களுக்குமிடையிலான விவாதத்தில் ரசிகர் தோலவியுற்றார். இதனால் கோபமுற்ற ரசிகர் தான் தங்கியிருந்த அறையைத் தீவைக்க முற்பட்டபோதே ஊழியர்களினால் தாக்கப்பட்டு பொலீஸில் ஒப்படைக்கப்பட்டார்.

நீதிமன்றத்தில் ரசிகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் அவருக்கு 2 மாத சிறைத் தண்டனையும், ஆயிரத்து எழுநூறு டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது. (இ-ரீ)

## அசௌகரியங்களை நீக்க கடற்படை அதிகாரி உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 8

தீவுப்பகுதிகளில் வாழும் மக்கள் கடற்படையினரால் ஏதாவது அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்பட்டால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தீவுப்பகுதியின் கடற்படை அதிகாரி உடவத்தை தெரிவித்துள்ளார் என்று ஈ. பி டி. பி. அமைப்பின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஈ. பி.டி.பியின் தீவக அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான நடராசா மதனராசா கடற்படை அதிகாரியை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரை மக்கள் பீதியுடன் எதிர்நோக்குவதாகவும் —

சோதனை நிலையங்களில் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் — இக்கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தமக்கு தெரியப்படுத்தும் சந்தர்ப்பங்களில் தாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் —

சோதனை நிலையங்களில் க்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு முயற்சிப்பதாகவும் — தீவக கடற்படை அதிகாரி உறுதி அளித்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## பாசறை விழா

சண்டிலிப்பாய், ஜூலை8

காங்கேசன்துறை, மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்த பாசறை விழாவும், குருளைச் சாரணர் ஆண்டு விழாவும் எதிர்வரும் 10 ஆம், 11ஆம், 12 ஆம் திகதிகளில் மருதனார் மடத்திலுள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், மகாஜனக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

மாவட்ட சாரண ஆணையாளர் ந, சௌந்தரராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே கணேசலிங்கம், யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவர்ராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (இ-135)

# தேர் உற்சவத்திற் கலந்துகொள்ள பெருமளவு பக்தர் நயினை புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 8

நயினாதீவு நாகபூஷனி அம்பாள் தேர் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று யாழ். மாவட்டத்தில் பல இடங்களிலும் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் நயினாதீவு நோக்கிச் சென்றனர்.

இன்று தேர் உற்சவமும் நாளை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

நயினாதீவு அம்பாள் வருடாந்தஉற்சவத்தையொட்டி விசேட பஸ் போக்குவரத்து உட்பட பல அத்தியாவசிய வசதிகள் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நயினாதீவுக்குச் செல்வதற்காக யாழ். பஸ்நிலையத்தில் நீண்ட வரிசையில் மக்கள் நின்று கொண்டிருந்தனர்.

இதேவேளை நயினாதீவில் தொண்டர் சேவையில் ஈடுபடுவதற்காக 70 பேரடங்கிய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை ஒன்று சென்றுள்ளது.

யாழ். மாவட்ட ஆணையாளர் செ. செல்வரஞ்சன் தலைமையில் இக்குழுவினர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். பரி. யோவான் கல்லூரி இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரி,கனகரத்தினம் மத்திய ம.வி. வைத்தீஸ்வராக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, மாணவர்கள் இந்த தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

'நயினாதீவு கனிஷ்ட ம.வி. மாணவர் உற்சவ ஆரம்பம் முதல் முடிவு வரையும் தொண்டர் சேவை ஆற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

## அராலி இந்து பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 8

அராலி இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழன் காலை 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ம. மகாதேவா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணகல்விவலயம்-2இன் கல்விப்பணிப்பாளர்சி.சிவராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், சங்கானைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ கணேசலிங்கம், இலங்கை வங்கியின் உதவி முகாமையாளர் இ. விஜயரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-ரீ)

## கருத்தரங்கு

கொழும்புத்துறை,ஜூலை 8

இணுவில் தெஸ்பியன் கலை வட்டம் நடத்தும் மாதாந்த அறிவியற் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பூரணை தினம் மாலை 3.30 மணிக்கு யாழ். இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி என். சண்முகலிங்கன் இந்நிகழ்வில் பங்குபற்றிச் 'சமூக மேம்பாட்டுக்கான கலைகள்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

## மாஹோ கப்பலில் வெங்காயம்

தென்பகுதிக்கு எடுத்துச் செல்லவென புகையிலை, வெங்காயம் ஆகிய பொருள்கள் மாஹோ கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் எக்கட்சியின் வெற்றிக்கும்
# சிறிமானியின் கட்சி உழைக்காது!

கொழும்பு, ஜூலை 8
தென்பகுதியில் நடைபெற விருக்கும் மாகாண சபைத் தேர்தல்களின் போது எந்த வொரு கட்சியின் வெற்றிக்கும் பாடுபடப்போவதில்லை என்று தாம் முடிவு செய்திருப்பதாக புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் (லலித் பிரிவு) தலைவி ஸ்ரீமானி அத்துலத் முதலி அறிவித்துள்ளார்.

இருந்த போதிலும் தமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வேறு அரசியல் சட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கு வழி வகுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு தமது ஆதரவு தேவையில்லை என அதன் தலைவர்கள் தெளிவுபடுத்தியுள்ள போதும், வேறு கட்சியின் பிரசார மேடையில் ஏறி பிரசாரம் செய்வது நல்ல பண்பாக அமையாது என்பதனால் தாம் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக திருமதி அத்துலத் முதலி மேலும் தெரிவித்துள்ளார்.
(உ-6)

## சுகாதாரச் சீர்கேடு நீக்கப்படுமா?

காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம்வரை நிவாரணப்பொதிகளை ஏற்றி இறக்கும் லொறிச்சாரதிகளும், மற்றும் தொழிலாளர்களும் காங்கேசன் துறையில் உணவு அருந்துவதற்கு தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தால் அமைக்கப்பெற்றது ஒரே ஒரு போசனசாலை. அப்போசன சாலை சாரதிகளுக்கும் கப்பலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் மட்டும் தான்.


அப்போசனசாலையில் சருமநோய் உள்ளவர் ஒருவர் உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார். இதனால் அங்கு செல்லும் தொழிலாளர்கள் அனைவரும் உணவு அருந்துவதற்கு அஞ்சி சாப்பிட முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மக்களுக்காகச் சேவையில் ஈடுபடும் ப.நோ.கூ.சங்கம் இதனைக் கவனத்திற் கொள்ளாமல் இப்படிப்பட்ட நோயாளியை வேலைக்கு அமர்த்தியதை உரியவர்கள் உடனடியாகக் கவனத்தில் எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்,

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுத்து ஆவன செய்வார்களா?

—லொறிச் சாரதிகள்

## பாராமுகம் ஏனோ?

ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையிலும் தற்போது வேலையில்லாப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. படித்துவிட்டு வேலைக்காக ஏங்கித் திரிபவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்தே வருகின்றது. வேலை வங்கியில் வேலைக்காகக் காத்திருந்து காத்திருந்து வயது தான் போகின்றது. அங்கும் லஞ்சம், ஊழல் என்பவை நடைபெறாமல் பொறுப்பு வாய்ந்தவர்கள் பார்த்துக்கொண்டால் சரி. இன்று அனேகமான வேலைவாய்ப்புக்கள் படிப்பின் தகுதிகளுக்கு ஏற்ற வகையிலேயே வழங்கப்படுகிறது. இது வரவேற்கப்படக்கூடியதே. ஆனால் வேலை வாய்ப்புக்களுக்கான அறிவிப்புக்களை அறிவிக்கும்போது பல சமயங்களில் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் திறைமைச் சித்தி எய்தி இருக்க வேண்டும் என்று அறிவிப்பார்கள். அப்படி இருந்தும் அந்தத் தகுதிகளைக் கொண்டவர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் செலுத்தினாலுங் கூட அவர்கள் தகுதியானவர்களைத் தெரிந்தெடுக்க அதிக அதி விசேட சித்தியை எதிர்பார்த்து அதன் அடிப்படையிலேயே வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றார்கள். (இதில் வயதில் குறைந்தவர்களும் உள்ளடக்கப்படுகின்றனர்)




எதிர் பார்த்ததை விட அதிகம் பேர் விண்ணப்பித்தால் அப்படித்தான் செய்ய வேண்டும். அதில் குற்றமில்லை. ஆனால் அன்றைய காலத் தராதரத்தையும் இன்றைய காலத் தராதரத்தையும் ஒப்பிட முடியாது. இன்று போட்டிகள் அதிகம். அதனால் அதி விசேட சித்திகளும் அதிகம் என்பது மறுக்க முடியாது. அன்று நாம் திறைமைச் சித்திகளை எடுத்து வேலை வாய்ப்புக்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றோம். "டி" தராதரம் அதிகம் எடுத்தவர்களுக்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்பது வரவேற்கக்கூடியது தான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் வயது கூடியவர்களிலும் பார்க்க அவர்களுக்குப் பிறகுவந்த வயதிற் பிந்தியவர்களே வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கே "டி" தராதரங்கள் அனேகமாக இருக்கின்றது. ஆனால் "சி" தராதரங்கள் எடுத்த வயதில் மூத்த நாம், தொடர்ந்தும் வேலை கிடைக்கும் என நம்பி ஏமாற்றம் அடைந்து கொண்டே போகின்றோம்.

விண்ணப்பிக்கும் கட்டணங்களைச் சேர்த்து வங்கியில் போட்டால் கூட நன்மை கிடைத்திருக்கும். வேலைக்கு விண்ணப்பித்து ஏமாற்றம் அடைந்து இறுதியில் பணம் தான் விரயமாகின்றது! அத்துடன் எமது வயதும் விரயமாகிக் கொண்டுதான் போகின்றது! வேலை கொடுப்பவர்கள் மேற்படி உத்திகளைக் கையாண்டால் எமக்கு சாகும் வரை வேலை கிடைக்காது என்பது திண்ணம். வேலையும் ஒரு குறிப்பிட்ட வயது வரையும் தான் வழங்க முடியும். வயது கடந்தால் வேலையே கிடைக்காது. எம்மைப் போன்றவர்கள் அந்த வயதைக் கடக்கத்தான் வேண்டுமா?

வேலை கொடுப்பவர்கள், வயதில் குறைந்தவர்களை விட வயதில் மூத்தவர்களை முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிந்தெடுத்து அதில் கூடிய தராதரங்கள் பார்த்து வேலை கொடுத்தால் தப்பா........? அப்படிச் செய்வது தவறு என்று கருதி, 'சி' தராதரங்கள் எதிர்பார்த்து இறுதியில் 'டி' தராதரங்கள் மற்றும் பல தராதரங்கள் எதிர்பார்த்து அவற்றை எடுத்தவர்கள் தான் தகுதியானவர்கள். அதில் வயதில் குறைந்தவர்கள் இருந்தாலும் பரவாயில்லை என்பது தான் நியாயம் என்று முடிவு செய்தால் நாம் எல்லோரும் பாவிகளா? நாம் ஏன் பிறந்தோம்? வேலையில்லை, வேலையில்லாமல் குடும்பக் கவனிப்பு, திருமணம் இல்லை என்ற விரக்தியல்லவா எமக்கு ஏற்படுகின்றது. எம்மைக் கவனிப்பார் யாரும் இல்லையா? யாழ். அரசாங்க அதிபர் கூட இதனைக் கவனத்தில் எடுக்க மாட்டாரா?

இத்தனைக்கும் எமக்கு வயதில் குறைந்தவர்களிடம் கோபமோ, பொறாமையோ இல்லை. வயதில் மூத்தவர்கள் முதலில் அதன் பிறகு படிப்படியாக அவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் தானே. எனவே என்னைப் போன்ற பாதிக்கப்பட்டவர்கள் என்னைத் தொடர்ந்து குரல் கொடுப்பார்கள் என நம்புகின்றேன்.

'வேலை இல்லாதவன்
மணற்பகுதி, புத்தூர்;

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8
சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் ஒழுங்கு செய்துள்ள 'தலித்தியமும் பின் நவீனத்துவமும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வி. பி. சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தொடக்கவுரை நிகழ்த்துவார்.
(இ-ரீ)

## கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை,8
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் 'முயற்சி' சுய தொழில் அபிவிருத்தி நிலையத்தினால் கணனி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசசேவையில் இல்லாத, ஜி. சி. ஈ. உ/த பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஜி.சீ.ஈ சா/த பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும்—

விண்ணப்பங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்குள் இல, 106, 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள மேற்படி நிறுவனத்தின் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(இ-ரீ)

## ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன குருமுகூர்த்தம் ஆலயத்தைப் புனரமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சைவசமய முறைப்படி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்ந்து கட்டட வேலைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நல்லை ஆதீனத்தைச் சேர்ந்தவர்களால் எடுக்கப்பட்டு வருகின்றன,
(-8)

## நிரந்தர சேவை இன்னும் இல்லை

நெல்லியடி, ஜூலை 8
கரவெட்டிபனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் சுமார் பத்துக்கு மேற்பட்ட பணியாளர்கள் கடந்த பத்து வருடகாலமாக நிரந்தர சேவையில் சேர்க்கப்படாத நிலையில் பணிபுரிகின்றார்கள்.

இதேவேளை, திக்கம் பனஞ்சாராய வடிசாலையிலும் சுமார் 15-க்கு மேற்பட்ட தொழிலாளிகள்சுமார் எட்டு வருட காலமாக நிரந்தர சேவைக்கு அமர்த்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### திருநெல்வேலியில் சம்பவம்:

# தனிமையில் வாழ்ந்த பெண் வெட்டிக் கொலை

## அழுகிய நிலையில் சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
தனிமையில் வசித்து வந்த குடும்பப்பெண் ஒருவர் கோரமாக கொலைசெய்யப்பட்ட நிலையில் அவரது சடலம் வீட்டுக்குள்ளிருந்து அழுகி, துர்நாற்றம் வீசிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பலாலி வீதி,திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் வசித்து வந்த திருமதி நாகலிங்கம் பவானி (47 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது கணவர் வன்னிப் பகுதியில் தங்கியிருப்பதால் கடந்த சில வருடங்களாக இவ் வீட்டில் இவர் தனிமையில் வசித்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் இவரது வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து படையினர் தெரிவித்த முறைப்பாட்டின் பேரில் இந்தப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தர் படையினரின் உதவியுடன் வீட்டுக்குள் சென்று பார்த்தார்.

வீட்டின் நடுமண்டபத்தில் அழுகிய நிலையில் நிர்வாணமாகச் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

சடலத்தின் தோளிலும் இடுப்புப்பகுதியிலும் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்படுவதால் இது கொலையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கிராம சேவை உத்தியோகத்தர் இது தொடர்பாக கோப்பாய் பொலீஸாருக்கு தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து பொலீஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.
(உ-5-7-15-86-139)

## புதிய எஸ். பி.

வடமராட்சி, ஜூலை 8
யாழ். பிராந்திய பொலீஸ் அத்தியட்சகராக எஸ். சீவரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர் களுத்துறைப் பிராந்திய பொலீஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்தார்.
(உ-173)

## இரவு நேர சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமராட்சிப் பகுதியில் இருக்கும் தொலைத் தொடர்பு இணைப்புக்களுக்கு இரவு வேளையிலும் சேவை வழங்கக்கூடிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதான தொலைத்தொடர்பு சேவை பரிவர்த்தன நிலையத்தில் இதற்கென இரவு நேர ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டு இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மந்திகை வைத்தியசாலையில் அமைந்திருக்கும் தொலைத்தொடர்பு பரிவர்த்தன நிலையத்தில் இணைந்திருக்கும் தொலைபேசி இணைப்புக்கள் இந்தச் சேவையை நேரடியில் இருந்து பெற வழி செய்யப்பட்டுள்ளது.
(உ-15)

## சிறப்பு மலர் வெளியீடு

கொழும்புத்துறை, ஜூலை8
கொக்குவில்- நந்தாவில் அருள்மிகு ஸ்ரீ கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கொக்குவில் மனோன்மணி சன சமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

இம்மலரினையாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் வெளியிட்டு வைப்பார்.
(இ-30)

## இயந்திரங்கள் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ். போதனாவைத்திய சாலை நிறைகுறைந்த குழந்தைகள் பாராமரிப்பு நிலையத்தின் பாவனைக்கு நிறை குறைந்த குழந்தைகளைப் பராமரிக்கும் இரண்டு இயந்திரங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். போதனாவைத்திய சாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இயந்திரங்கள் நேற்று வந்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் கிளை நோயாளர் சேவைக் கப்பலில் எடுத்து வரப்பட்டன. கடந்த மாதமும் இதேபோல இரண்டு இயந்திரங்கள் ஆஸ்பத்திரியால் கொள்வனவு செய்யப்பட்டன.
(உ-15

## தேர்த்திருவிழா

தென்மராட்சி, ஜூலை 8
வரணி, இடைக்குறிச்சி சாவிலிப்பிட்டி கந்தசாமி கோயில் தேர்த் திருவிழா இன்று காலையும் தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறும்.
(உ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 8
அல்லாரை மதற்கு மீசாலை அறுகம்புஹ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் வருடாந்தமஹோற்சவத்தில் இன்று காலை தேர்த்திருவிழாவும் நாளை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
(இ-139)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**சிதம்பரப்பிள்ளை திரவியரத்தினம்**

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப் பிரிவின் செயலாளரும், யாழ்ப்பாணக் கிளையின் உதவிச் செயலாளருமாகிய

**சி. சுனேசன் அவர்களின்**
அன்புத் தாயார்

**திருமதி திரவியரத்தினம் சிதம்பரப்பிள்ளை**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் டாக்டர் சு. சி. அருளானந்தம்
பிராந்தியத் தலைவர், லயன்ஸ் கழகம்.

தொண்டர், உறுப்பினர், நிர்வாக உறுப்பினர்,
செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவு,
மீசாலை கிழக்கு அலகு.

(சி/4215)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 நிலையங்களில்

# பொலீஸ் பொறுப்பதிகாரி பதவிகள் வெற்றிடம்

கொழும்பு, ஜூலை 8

தலைநகர் உட்பட பல இடங்களிலும் உள்ள 16 பொலீஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகள் பதவி வெற்றிடமாகவே உள்ளது. இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் சட்டம், ஒழுங்கு பேணும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, பொரல்ல, அனுராதபுரம் பொலீஸ் நிலையங்களும் இவற்றில் அடங்கும்.

பொலீஸ் தலைமையகத்தில் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பதவி உட்பட சில வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

அதே நேரம் கடந்த மாதம் உதவி பொலீஸ் அதிபர்களின் பதவி உயர்வு பெற்று பயிற்சி முடித்துக் கொண்ட 15 பேருக்கும் இது வரை சேவைக்குரிய இடம் வழங்கப்படவில்லை.

இப்பதவி உயர்வு பெற்றவர்கள் யுத்தப் பிரதேசத்திற்கே நியமிக்கப்படுவர் எனக் கூறப்படுகின்றது. (உ-21)

## யாழ்...

(முதலாம் பக்கம் தொடர்)

பஸ்நிலையத்தில் திரண்டிருந்த சுமார் 2 ஆயிரம் மக்கள் நேற்று மாலை பஸ் சேவை கிடைக்காததால் திரும்பிச் சென்றனர்.

இன்று காலை 6 மணி முதல் பஸ்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் — ஊர்காவற்றுறையில் இருந்து குறிகாட்டுவானுக்கு இரு பஸ்சேவைகள் இன்று நடத்தப்படவிருக்கின்றன. (உ-3-15-139)

## வட்டக்கண்டலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மட்டுமே வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் —

கடந்த ஒரு வாரத்தின் பின்னர் நேற்று மட்டும் இந்த வகையில் 300 பேர் வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3-164)

## ஜனாதிபதியைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளவத்தை சிவஸ்ரீ பா. சிற்சபேச மணிக்குருக்கள், பம்பலப்பிட்டி சிவஸ்ரீ ஜெ. நாகராஜக்குருக்கள், தெகிவளை சிவஸ்ரீ சத்யநாராயணக்குருக்கள், சம்மாங்கோடு சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக்குருக்கள், சர்வதேச இந்துமத குருபீடத்தின் பொதுச் செயலாளர் கொம்பனித் தெரு சிவஸ்ரீ கு. சிவபாலக்குருக்கள், கப்பித்தாவத்தைபிரம்மஸ்ரீ பா. ஷண்முகரெட்ண சர்மா ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர். (உ-3)

## கொழும்பில் தேடுதல்

கொழும்பு, ஜூலை 8

வெள்ளவத்தை, கிரிலப்பனை, நாரஹேன்பிட்டிய, பம்பலப்பிட்டிப் பகுதிகள் நேற்று முன்தினம் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

தமிழர் வீடுகளில் தேடுதல் நடத்திய படையினர் அவர்களின் வதிவிடப் பாஸ் உட்பட பல ஆவணங்களையும் பரிசோதித்தனர்.

இத்தேடுதலில் பல விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் அவர்களில் பலர் நேற்றே விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 5 பொலீஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 8

பாதாள உலகத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ள ஐந்து பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்க பொலீஸ்மா அதிபதி முடிவு செய்துள்ளார்.

மேற்படி பொலீஸார் வட — கிழக்கு யுத்த முனைக்கே பெரும்பாலும் இடமாற்றம் செய்யப்படலாம் என தெரிய வருகின்றது. (உ-21)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்)

கட்சியான ஐ. தே. க. ஒத்துழைக்க வேண்டும் என்றும்—

அரசுத் தரப்பில் கோரப்பட்டு வருகின்றது.

ஆனால் ஐ. தே. கட்சி அதற்கு இணங்கவில்லை. மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று அது வலியுறுத்தி வருகின்றது.

தற்போதைய நிலையில் அவசரகாலச் சட்ட விதிகளுக்கு கீழேயே மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைக்க முடியும்.

சாதாரண சட்டங்களின் கீழ் மாகாணசபைத்தேர்தல்களை ஒத்தி வைப்பதாயின் அதற்குச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படவேண்டும். சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு உறுப்பினர்களின் ஆதரவு அரசுக்குத் தேவை.

மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுபெறுவதற்கு ஐ.தே. கட்சியினரின் ஒத்துழைப்பை அரசு பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இவ்விடயத்தில் ஐ. தே. கட்சி ஒத்துழைக்க மாட்டாது என்பது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

ஆகவே தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசுக்குள்ள ஒரே வழி அவசர காலச் சட்ட விதிகளைப் பயன்படுத்துவதுதான்.

ஆனால் தற்சமயம் யுத்தம் நடைபெறும் வடக்கு-கிழக்கிலும் தெற்கில் சிற்சில இடங்களிலும் மட்டுமே அவசர காலச் சட்ட விதிகள் நடைமுறையில் உள்ளன.

இதனை வைத்துக்கொண்டு தென்பகுதியின் சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையும் ஒத்தி வைக்க முடியாது.

எனவே இத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு வசதியாக அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதும் விஸ்தரிக்க அரசு திட்டமிடுவதாக கூறப்படுகிறது.

தற்போதைய மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுவதான பிரகடனம் வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## இலங்கை பொன்விழா

# சுதந்திரக் கிண்ணம் இந்திய அணிக்கு!

கொழும்பு, ஜூலை 8

இலங்கையின் பொன்விழா சுதந்திர தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட மூன்று நாடுகள் பங்குகொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்திய அணி வெற்றியீட்டியது.

இலங்கைக்கு எதிராக நேற்று கொழும்பு பிரேமதாஸா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா ஆறு ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஐம்பது ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 307 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சச்சின் டென்டுல்கரும், சௌரவ் கங்குலியும் முதல் விக்கெட் இணை ஜோடியாக 237 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையைப் படைத்தனர்.

இலங்கை அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 301 ஓட்டங்களைப்பெற்றது. (உ-3-6)

# தமிழர் ஆசிரியர் சங்கம் பாராட்டும் கண்டனமும்

கொழும்பு, ஜூலை 8

வடக்கு-கிழக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் உடனடியாக வழங்கப்படும் என கல்வி அமைச்சரும், வடக்கு—கிழக்கு ஆளுநரும் உறுதியளித்திருப்பதைப் பாராட்டி அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

அதன் செயலாளர் த. மகாசிவம் விடுத்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் நேரடிப் பயமுறுத்தல், படையினரின் மறைமுகமான பயமுறுத்தல் ஆகியவற்றுக்கும் மத்தியில் எதுவித வன்முறையும் இன்றி அமைதியாக சாத்வீகப் போராட்டம் நடத்தியமைக்காக பட்டதாரிகளைப் பாராட்டி நன்றி தெரிவிக்கிறோம்.

மாகாண அமைச்சுச் செயலரின் கவனயீனமான செயலால் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் தாமதமாவதைக் கண்டிக்கிறோம்.

சாத்வீகப் போராட்டம் நடத்திய திருமலைப் பாடசாலை மாணவர்களைத் தாக்கிக் காயப்படுத்தியமையையும் கண்டிக்கிறோம் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்க பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்குக்கு

# உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி

வல்லிபுரக்கோயில் காவலரண் ஊடாக வடமராட்சிக் கிழக்கில் உள்ள மணற்காடு கிராம மக்கள் உணவுப் பொருள்கள் எடுத்துச்செல்ல இருந்த கட்டுப்பாடு நேற்று முதல்தளர்த்தப்பட்டுள்ளது.

வடமராட்சி பிரிகேட் தளபதி கேணல் சரத் கருணரத்தின நேற்று முன்தினம் அப்பகுதி மக்களுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து, இதற்கான அனுமதியை வழங்கினார். (15-173-36-7)

## தாக்குதல்

விலைகொடுத்து கோழி வாங்கச்சென்ற மூவர், தாம் குறிப்பிட்ட விலைக்கு கோழியை வாங்க முடியாததால்ஆத்திரமடைந்துகோழி விற்பனையாளரைக் கையாலும், கல்லாலும் அடித்துத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

வட்டுக்கோட்டை தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராசதுரை அருள்பிரகாசம் (வயது 45) என்பவரே அடித்துத்தாக்கப்பட்டார். இவர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## புலோப்பளை...

(முதலாம் பக்கத் தொடர்)

மோர் கண்ணி ஒன்றை வெடிக்க வைத்ததாகவும் —

படையினர் தரப்பில்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும்—

பலாலி இராணுவத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

ஜூலை 1998

இன்னிசை நற்செய்திப் பெருவிழா

மீண்டும் உங்களுடன்

தந்தை பெர்க்மான்ஸ்

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

"ஆறுதலின் தொனி"

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| செல்லமுத்து விளையாட்டரங்கு மானிப்பாய் | 09 - 11 | பி. ப. 3-30 |
| ★ துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம். | 15 – 17 | பி.ப. 3.30 |
| ★ செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம், கல்வியங்காடு/ நல்லூர். | 18 – 19 | பி.ப. 3.30 |

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம் இலவசம்.

(சி/4206)

## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிக!

இல. 19/1 பி. ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீ. கிருஸ்ணமூர்த்தி ஞானசீலனாகிய எனது கட்சிக்காரர் தொடர்பாக, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் குமாரசாமி என்பவருக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு (நானா வீதம்) 12 தொடர்பாக யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள சூரியகாந்தி பத்திரிகை அச்சகத்துத் தளபாடங்களையோ, உபகரணங்களையோ எவரும் கையாளக்கூடாது என்ற ஒரு கட்டாணை மூலம் 98-05-06 திகதி யாழ். மாவட்ட நீதிமன்றின் மூலம் குமாரசாமி கட்டுப்படுத்தப்பட்டுள்ளார். எனவே பொது மக்கள் எவரும் அவ்வச்சகத்தில் எந்தவொரு பகுதியினையும் கொள்வனவு செய்தலோ, அல்லது அவ்விடத்தில் இருந்து இடம்மாற்றுதலோ அல்லது அதைக் கையாளுதலோ கூடாது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

சட்டத்தரணி கே- அரியநாயகம்,
71/5, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4214)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org